Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00:

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 06 | (21-12-93) | செவ்வாய்க்கிழமை | ஓசை 306

நல்லூ ... லகம்

## நத்தார் வாழ்த்து மடல்களும் ஜனவரிக்கு பின்பே கிடைக்கும்

நத்தார் புதுவருட வாழ்த்துமடல்கள் தொகையாக பண்டிகை நாள்களில் விமானத் தபாலில் சேர்க்கப்படுவதால் உரிய முகவரியாளர்களுக்கு பண்டிகை நாட்களின் போது அவை சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டாக நவம்பர் மாதத்திலேயே இத்தகைய வாழ்த்து மடல்களை தபாலில் சேர்க்கும்படியும் அவ்வாறு இல்லைஎனின் அவை தபாலில் தாமதமாகுதலைத் தவிர்க்க முடியாது போகும் எனவும் சர்வதேச தபால் ஒன்றியம் வருடாவருடம் அறிவிப்பது வழமை. வட பகுதி மக்களைப் பொறுத்தவரையிலோ கொழும்பிலிருந்து கடைசியாக கப்பலில் இடப்பட்ட தபால் எடுத்துவரப்பட்டது அக்டோபர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் போரிட வசதியாக மந்திரிசபையில் மாற்றம்

### ஓய்வுபெற்ற படைஅதிகாரிகளுக்கு ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடக் கூடிய வகையில் சிறிலங்கா மந்திரி சபை மாற்றி அமைக்கப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் முன்வைத்த சிபார்சுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ் ஓய்வு பெற்ற அதிகாரிகள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்திருந்தமை தெரிந்ததே.

இப்படை அதிகாரிகளின் சிபார்சுகள் முழு அளவில் பரிசீலிக்கப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக முன்னாள் விமானப்படை அதிகாரி எயாமாஷல் ஹரிகுணதிலக தெரிவித்தார்.

## ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை!

### ஜனாதிபதி விஜேதுங்க பிரகடனம்

(கொழும்பு)

ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சி மற்றும் அதற்கான தூண்டுதல் என்பவற்றுக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் எனவும்; இக்குற்றம் புரிந்தோர்க்கு மூன்று மாதம் முதல் 20 ஆண்டுகள் வரையிலான கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் நேற்று ஜனாதிபதி விஜேதுங்கவினால் பிறப்பிக்கப்பட்ட மூன்றுபக்க புதிய பிரகடனம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் இந்த பிரமாணங்கள் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளன இதன் பொருட்டு அவசரகால சட்டவிதியிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி ஜனாதிபதிமீது அல்லது அரசாங்கம் மீது வெறுப்பை அல்லது அவ (4 ஆம் பக்கம் பார்க்க)

### [ இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ]

# மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏழு பேர் நேற்று கடத்தப்பட்டனர்

## வெருகலில் சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெருகல் பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் மீது புலிகள நடாத்திய தாக்குதலில் ஓர் இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார். மேலும் இரு படையினர் படுகாயமடைந்தனர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனியன்று அதிகாலை வெருகல் இராணுவ முகாமிற்கு முன்பாக அமைந்திருந்த காவலரண் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் காவலரண் முற்றாக சேதமடைந்தது.

## நம்பிக்கையில்லா தீர்மானத்தை தோற்கடிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த ஏழு மத்திய மாகாண சபை

## வடமராட்சியில் அடைமழை போக்குவரத்துக்கள் துண்டிப்பு

(நமது நிருபர்)

யாழ். மாவட்டம் எங்கும் அன்றாட தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக முகாம்கள் வெள்ளத்தில் மிதப்பதால் இடம்பெயர்ந்

பாய் கொல்லப்பட்டார். மேலும் இரு படையினர் படுகாயமடைந்தனர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனியன்று அதிகாலை வெருகல் இராணுவ முகாமிற்கு முன்பாக அமைந்திருந்த காவலரண் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் காவலரண் முற்றாக சேதமடைந்தது.

# ஏழு பேர் நேற்று கடத்தப்பட்டனர்

## நம்பிக்கையில்லா தீர்மானத்தை தோற்கடிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த ஏழு மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். இன்று மத்திய மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராக எதிரணிகளால் கொண்டு வரப்பவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இ. தொ. கா. உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களிக்குமாறு இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான தொண்டமான் தமது கட்சி உறுப்பினர்களுக்குஅறிவுறுத்தியிருந்தார். இதனை தொடர்ந்து ஐ. தே. கா. மாகாண அரசிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்கும் முகமாகவே இக் கடத்தல் இடம் பெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

இதேவேளை, இக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் ஒன்றிற்கு ஒன்று முரணாகவுள்ளன.

இது தொடர்பாக கட்சியின் தலைவர் தொண்டமான் கடத்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், இ. தொ. காங்கிரஸின் பொதுச் செயலாளரான செல்லச்சாமி உறுப்பினர்கள் எவரும் கடத்தப்படவில்லை எனவும், அவர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதில் எதுவாக இருப்பினும் ஐ.தே.க முதலமைச்சருக்கு எதிராக இன்று நடை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## உறுப்பினர்கள் கடத்தல் முதலமைச்சரின் திட்டமிட்ட செயல்

### - தொண்டமான்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மத்திய மாகாண சபைஉறுப்பினர்கள் கடத்தப்பட்டது மாகாண முதலமைச்சரின் திட்டமிட்ட செயல்என இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமான் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்கள் தாம் விரும்பியவாறு வாக்களிக்க பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டும். இதுவேஜனநாயகம். மத்திய மாகாண சபை முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது இ. தொ. கா. உறுப்பினர்கள் ஆதரவாகவே வாக்களிப்பர் எனக்குறிப்பிட்ட தொண்டமான் இதில்எந்த மாற்றமும் இல்லை என உறுதிபடத் தெரிவித்தார்.

## இ. தொ. கா. உறுப்பினர்கள் எவரும் கடத்தப்படவில்லை

### - செல்லச்சாமி

(கொழும்பு)

மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் கடத்தப்படவில்லை. அவர்கள் மிகுந்த பாதுகாப்பாக வைக்கப்படும் நோக்கத்துடன்இரகசியமான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்பதே உண்மை என இராஜாங்க அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான எம்.எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

எமது கட்சியின் இவ் உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடத்தில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தொலைபேசி உட்பட சகல தொடர்புகளும் அவர்களுக்கு உள்ளன. எனவே தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வதில் எந்த நியாயமும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கடத்தப்பட்ட உறுப்பினர் பத்திரிகையாளர் மாநாடு

(கொழும்பு)

கடத்தப்பட்ட ஏழு மத்திய மாகாண இ.தொ.கா உறுப்பினர்கள் நேற்று மாலை செய்தியாளர் மகாநாட்டை கூட்டியுள்ளதாகச் சந்தேசிய வானொலியின் செய்தியாளர் எல்மோ. பெணாண்டோ தெரிவித்துள்ளார்.

மேற்படி ஏழு மத்திய மாகாணசபை இ. தொ.கா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### வீரச்சாவு



வீரவேங்கை சம்பந்தன்

சுகயீனம் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சம்பந்தன் (சின்னத்துரை சாம்பசிவம் - இலுப்படிச்சேனை, கொத்தியாவலை, மட்டக்களப்பு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடமராட்சியில் அடைமழை போக்குவரத்துக்கள் துண்டிப்பு

(நமது நிருபர்)

யாழ். மாவட்டம் எங்கும் மூன்றாவது நாளாக நேற்றும் கடும் காற்றுடன் மழை பெய்தது நண்பகலுக்கு சற்று பின்பாக ஆரம்பித்த இம் மழை நள்ளிரவுவரை தொடர்ந்து பெய்த வண்ணமிருந்தது.

வடமராட்சிப் பகுதியில் பெய்துவரும் அடைமழையினால் போக்குவரத்துகள் தடைப்பட்டிருப்பதுடன் வீதிகளும் பெரும் சேதமடைந்துள்ளன. கடல் பெரும் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது இதனால் பருத்தித்துறை இறங்குதுறையும் சேதமடைந்துள்ளது. கடல் தொழில் உட்பட மக்களின் அன்றாட தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக நமது செய்தியாளர் அறிவிக்கின்றார்.

தென்மராட்சிப் பகுதியில் தாழ்ந்த பிரதேச மக்கள் கொட்டும் மழையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

முகாம்கள் வெள்ளத்தில் மிதப்பதால் இடம்பெயர்ந்தோர் அனைவரும் தத்தமது முகாம்களை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும் ஆலயங்கள் மற்றும் பொதுக் கட்டடங்களிலும் தஞ்சமடை

( 4 ஆம் பக்கம் பார்கக )

## முல்லை மாவட்ட மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மக்கள் தமது உடைமைகளையும் வீடுகளையும் இழந்து மேட்டு நிலப்பரப்புகளிலுள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். வெள்ளத்தால் சூழப்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை மீட்கும் பணி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இரண்டாக பிளவுபடும் நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

இலங்கைத் தொழிலாளர் கட்சிக்குள் பிளவு ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

ஏழு மாகாண சபை உறுப்பினர்கள் இனம் தெரியாதோரால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித்தலைவர் செள. தொண்டமானுக்கும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமிக்கும் இடையிலேயே கடும் கருத்து வேற்றுமை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது இக்கருத்து வேற்றுமைகட்சிக்குள் பெரும் பிளவைஏற்படுத்தலாம் என பி பி ஸி நேற்றிரவு தெரிவித்தது.

## உறுப்பினர் கடத்தலைத் தொடர்ந்து மலையகத்தில் வேலைநிறுத்தம்

மத்திய மாகாணசபையின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழுபேர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து நேற்று மலையக தோட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கடத்தப்பட்ட இ.தொ.கா. மாகாணசபை உறுப்பினர்கள் ஏழுபேரையும் விடுவிக்குமாறு இவர்கள் கோரினர்.

சுமார் 65 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தனர். இதன் காரணமாக நுவரெலியா, சிந்துகெலே, ஹட்டன், நானுஓயா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வேலை நிறுத்தத்தை ஒடுக்க அரசு புதிய சட்டம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ள வேலை நிறுத்த அழைப்புக்கு பதிலடியாகவே அரசு அவசர காலச் சட்டத்தை மீளவும் அமுல்படுத்தியுள்ளது. மத்திய மாகாணத்தில் நுவரெலியாப் பகுதியில் சுமார் 60,000 வரையிலான தோட்டத் தொழிலாளர்கள் தங்களது வழமையான கடமைகளுக்குச்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### உணவு சேவை

புரியாணி. நூடில்ஸ்வகை, சூப்வகை, (f) பிரைட்றைஸ், சிக்கன் 65, ரோல்ஸ், கட்லட், etc. etc. etc. -பரிமாறுசேவை உடன் நாடவும், காருண்யா சைனீஸ் ஹொட்டேல் இல. 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6957)

### ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான டிசம்பர் மாதக்கொடுப்பனவு இன்று (21-ம் திகதி) தொடக்கம் அடைக்கலமாதாதேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும் என அதன் முகாமையாளர் திரு வசந்தகுமார் அறிவித்துள்ளார். (22)

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் மண்கும்பான் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்விகள் ச. ஜசித்ரா, ச. ஜனித்ரா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். யாழ் கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வி. த பிரேமினி, செல்வன். சு.நவரூபகாந்த், செல்வி சி.க யத்ரி ஆகியோரும், யாழ் உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்விகள் எம்.பமினி. கே.கார்த்திகா, ஊரெழு கணேச வித்தியாசாலையைச் சேர்ந்த செல்வி. கே. காயத்ரி ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்

யாழ் ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையை சேர்ந்த

வலிகாமம் மேற்கு பிரதேசசபை
(சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உபஅலுவலகங்கள்.)

1987-ம் ஆண்டின் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134-5,6,7-ம் பிரிவின் கீழ் 1994-ம் ஆண்டிற்கு எமது பிரதேச சபை வரியிறுப்பாளர்களிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1994ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரமே அறவிடப்படும் ஆதனவரி அறவீட்டு விகிதமும் மாற்றமின்றி இருக்கும். 1994-ம் ஆண்டு முழுவதிற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10 / கழிவும், 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31, ஏப்பிரல 30, ஜூலை 31, ஒக்டோபர் 31 க்கு முன் செலுத்துவோருக்கு 05 /. கழிவும் வழங்கப்படும்

1-ம் கந்தாயம்-31-03-94க்கு முன்செலுத்தப்படவேண்டும்
2-ம் ,, -30-06 94க்கு ,, ,, ,,
3-ம் ,, -30-09-94க்கு ,, ,, ,,
4-ம் ,, -31-12-94க்கு ,, ,, ,,


மேற்குறித்த கால எல்லைக்குள் ஆதனவரி செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள மீது குடியிருப்பு ஆதனமாயின் 5·/ உம், வியாபார நோக்கத்திற்கு பாவிக்கப்படும் ஆதனமாயின் 20·/ உம் பற்றாணை (தண்டப்) செலவாக அறவிடப்படும். இத்தொகை குறித்த காலத்தில் (உரிய ஆதனவரி) செலுத்தப்படாவிடில் வரியுடன் சேர்த்துக் கணிக்கப்படும்.

ஆதனவரி சம்பந்தமாக இவ்விளம்பரத்தைத் தவிர வேறு அறிவித்தல்கள் ஏதும் வழங்கப்பட மாட்டாது ஆதன உரிமையாளர்கள எம்முடன் தொடர்பு கொண்டு தங்கள ஆதனத்தின் வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.


மேலும், தங்கள் ஆதனத்தின் உரிமை தங்களால் மாற்றப்படும்போது அல்லது பிரிவிடுதல் செய்து வழங்கப்படும் போது எம்முடன் தொடர்பு கொண்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி எமது பதிவேடுகளில் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களை உப அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ அறிந்து கொள்ளலாம்.

செல்வி ரூபினி கனகரத்தினம்
வலிமேற்கு பிரதேசசபை, விசேட ஆணையாளர்
சுழிபுரம். வலி மேற்கு பிரதேசசபை.
14-12-1993, (சி-8172)

## 41-ம் நாள் நினைவலைகள்



## ஓராண்டு வீர அஞ்சலி




### கடற்புலி மேஜர் ஆசீர்
(கணேசபிள்ளை இராஜகுலசிங்கம்)

வீரச்சாவு: 20-12-1992

''சென்றதோ ஓர் வருடம்; செல்லட்டும் பல வருடம்,
தீயாகி, மண்ணோடு உறவாகிக் கலந்தாலும்
மாவீரனுன் நினைவு மாறிடா!
திருகோணமலை யன்னையவள் ஈன்றுதந்த வீரப்புலி,
அங்கே கானகத்திலும், அதன்மலை, வயல்வரப்
பெலாம் களமாடியவன்!
இந்தியப் பாசறையிலோர் போர்க்கலை கற்றிவன்
தேறினன்,
இலங்கை, இந்திய இராணுவவரக்கருடனும்
செங்களமாடி வென்றவன்!
மாபெரும் சாதனை பலவும் படைத்து பெயர்
நிலைத்த வேளை,
கடலெனும் எல்லைகள் காத்து, கடற்புலியாகக்
கலந்த வீரன்!
உன்னதமான ஓரிரு காலம் கழித்தாய் எம்முடனே,
ஒப்பற்ற உனக்கு செலுத்துகிறோம் நம்அஞ்சலியே!!''

கல்லூரி வீதி, திருமலை. — திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகம்.
(6938)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10-7-1911

உதிர்வு: 21-12-1992

உரும்பராயைப் பிறந்தகமாகக் கொண்டவரும், நாயன்மார்கட்டை வாழ்விடமாக்கியவரும்

அமரர் திருவாட்டி

## 41-ம் நாள் நினைவஞ்சலி



தாயக மண்ணில்: 4-11-1976

தாயகமண்ணுக்காய்: பூநகரி முகாம் தகர்ப்பில் 11-11-1993

### வீரவேங்கை செல்லக்கிளி
(முத்துலிங்கம் சதீஸ்வரன்)

அன்போடிணைந்த சதீஸ் நீ
கண்போன்ற எங்களைக் கண்ணீரில் மிதக்கவிட்டு
இன்று மாவீரர் வரிசையிலே
மங்கா இடம்பெற்று
நாற்பத்தி ஓராம் நாள் போனாலும்
ஆறாது எம் துயர்.

21-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரிப்பாய், அச்சுவேலி
தற்காலிக முகவரி; சந்தையடி, அச்சுவேலி.

அன்பின் அப்பா, அம்மா, சகோதரர்கள், மாமாமார், உறவினர்கள்.
(6940)

## நினைவு கூருகின்றோம்...

1993-12-21

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ **சோ** (சோமசுந்தரம் பாலச்சந்திரன் - மூதூர் - திருமலை)

❋ **பழம்/கதிரவன்** (க. தவராசா - சம்பூர், மூதூர்- திருமலை)

1985ஆம் ஆண்டு சுதுமலைப்பகுதியில் எமது முகாமொன்றை உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அல்பேட்** (கந்தையா ரூபதநிதி-அச்சுவேலி தெற்கு - யாழ்)

1987ஆம் ஆண்டு புளியங்கூடல், அம்மன் கோவிலடிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அப்ஸ்** (க. ரவீந்திரன் - புளியங்கூடல் - ஊர்காவற்றுறை)

**லெப். சாந்தன்** (மா. செலஸ்ரின் தேவராஜ்- 11-ம் வட்டாரம்-நெடுந்தீவு)

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்

## பரீட்சையில் சித்தி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் மண்கும்பான் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்விகள் ச.ஜசிந்ரா, ச.ஜனித்ரா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். யாழ் கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வி. த.பிரேமினி, செல்வன். க.நவரூபகாந்த், செல்வி சி.கயத்ரி ஆகியோரும், யாழ் உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்விகள் எம்.பமினி. கே.கார்த்திகா, ஊரெழு கணேச வித்தியா சாலையைச் சேர்ந்த செல்வி. கே. காயத்ரி ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

யாழ் ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையை சேர்ந்த சி.மதிதரன், ஹ.சுவர்ணா, பேரி ஜெயச்குமாரி, சி.ஜீத். இ.ஜனனி வி.ஆரணயா ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர். சுன்னாகம் கொத்தணியில் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியலயத்தைச் சேர்ந்த ஒன்பது மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

## போட்டிமுடிவுகள் வெளியாகின

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் பல்கலைக்கழகம், பாடசாலைகள் மட்டத்தில் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ உரையின் நூற்றாண்டு விழாவினையொட்டி மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டியை நடாத்தியது.

இக்கட்டுரைப்போட்டியில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

பல்கலைக்கழக மட்டத்தில முதலம் இடத்தை செல்வி சிறிரதிதேவி-மார்க்கண்டு (யாழ்.பல்கலைக்கழகம்), இரண்டாம் இடத்தை செல்வி. சி.திரிலோஜினி (யாழ்.பல்கலைக்கழகம), மூன்றம் இடத்தை செல்வி கணநாதன்-மைதிலி(யாழ்.பல்கலைக்கழகம்), ஆறுதல் பரிசை செலவன். க.நித்தியானந்தன்(யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரும்.

பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தை செல்வி. பகீரதி-பவிவாகனம் (யாழ் வேம்படி மகளிர்கல்லூரி), இரண்டாம் இடத்தை செல்வன் பு.செந்தில்ரூபன் (யாழ்.இந்துக்கல்லூரி), மூன்றாம் இடத்தை செல்வன்.ஆர்.ஸ்ரீராகவன் (யாழ் பரியோவான் கல்லூரி), ஆறுதல் பரிசை செல்வி.க.மதிவதனி (வட. இந்து மகளிர் கல்லூரி), செல்வி அ. பிரேமசாநதினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) முறையே பெற்றுக் கொண்டனர்.

(யோ)

கப்படும் போது எம்முடன் தொடர்பு கொண்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி எமது பதிவேடுகளில் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களை உப அலுவலகங்களிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ அறிந்து கொள்ளலாம்.

செல்வி ரூபினி கனகரத்தினம்

வலி மேற்கு பிரதேசசபை, சுழிபுரம். | விசேட ஆணையாளர் வலி மேற்கு பிரதேசசபை.

14-12-1993, (சி-8172)

## 41-ம் நாள் நினைவலைகள்



### கப்டன் கரிகாலன் (மஞ்சு)

(தர்மரத்தினம் பிரபாகரன்)

தாயின் மடியில் 16.11.1972 — தாயக மண்ணில் 11.11.1993


தாயகம் மீட்டிடத் தமிழ் மண்ணைக் காத்திட
தன்மானம் பெரிதென்று தன்னையே அர்ப்பணித்த
என் மஞ்சண்ணாவே
புயல் வீசும் கடலினிலே புறப்பட்டு கரிகாலன்
என்ற பெயரெடுத்த என் பாசமிகு அண்ணாவே
கயவர்கள் கடும் சமரில் கனல் கக்கும் விழியுடனே
கயவர்களை தூள் தூளாக்கி நெடும் பயணம்
சென்று விடுதலைப் பாதையிலே வித்தாகி விட்ட
என் மஞ்சண்ணாவே
உங்கள் சாவை சரித்திரம் ஆக்கிய வீரனே
அண்ணா, அண்ணா மஞ்சண்ணா உங்களை
எப்போது இனிக் காணப்போகின்றேன்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
அன்புத்தம்பி
ஜெகன்னி வாசன்

நந்தாவில் அம்மன்கோவிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

(6942)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10-7-1911

உதிர்வு: 21-12-1992

உரும்பராயைப் பிறந்தகமாகக் கொண்டவரும், நாயன்மார்கட்டை வாழ்விடமாக்கியவரும்

அமரர் திருவாட்டி
### சண்முகம் செல்லாச்சி
**திதி: 11-01-1994**

**திதி வெண்பா**

ஆங்கீ ரசவாண் படர்பக்க மார்கழியில்
தீங்கில் திரயோ தசித்திதியில் - பாங்காரும்
அன்னைசெல் லாச்சி அமலன் தாள் எய்தினார்
பன்னி அவர் பெருமை பாடு.

''கருணபவன்''
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

(6945)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 23-06-73

தாயக மண்ணில்: 11-11-93

### 2-ம் லெப். காண்டீபன்

(சின்னப்பு ரதீஸ்வரன்)

(பாரதி வீதி, அச்சுவேலி)

புறநானூற்றுத் தாயவள் மடிமீது வந்துதித்த புலி வீரனே காண்டீபா! தாய் நாட்டின் விடிவிற்காய் விடுதலைப் பாதையில் வித்தான வீரனே! பூநகரி மண்ணில் உன் சாவதை சரித்திரம் ஆக்கிவிட்டு எங்கே நீ உறங்குகின்றாய்! உன் கல்லறைமீது எம் கண்ணீர்த் துளிகள்! விரைவில் உன் கனவு பலிக்கும். அன்று உன் கல்லறைகூட கதை பேசும்.

21-12-93 இன்று நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உனது நினைவை மறவாத,
அம்மா, அண்ணா,
அக்கா குடும்பத்தினர்

தற்போதைய முகவரி;
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(6951)

**1993-12-21**

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ **சோ** (சோமசுந்தரம் பாலச்சந்திரன் - மூதூர் - திருமலை)

❋ **பழம்/கதிரவன்** (க. தவராசா - சம்பூர், மூதூர்- திருமலை)

1985ஆம் ஆண்டு சுதுமலைப் பகுதியில் எமது முகாமொன்றை உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்த போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அல்பேட்** (கந்தையா ரூபதநிதி-அச்சுவேலி தெற்கு - யாழ்)

1987ஆம் ஆண்டு புளியங்கூடல், அம்மன் கோவிலடிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அப்ஸ்** (க. ரவீந்திரன் - புளியங்கூடல் - ஊர்காவற்றுறை)

**லெப். சாந்தன்** (மா. செலஸ்ரின் தேவராஜ்- 11-ம் வட்டாரம்-நெடுந்தீவு)

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**நாகரட்ணம் சிவசங்கர்** (தெல்லிப்பழை - யாழ்)

1988ஆம் ஆண்டு மலையகம் - அப்புத்தளைப் பகுதியில் ஜே வி பி இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழிளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு மன்னார் - கொண்டச்சிப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜோதிரவி** (பொன்னுச்சாமி சக்திவேல் - நானாட்டான் - மன்னார்)

**சங்கிலியன்** (சவரிப்பிள்ளை சகாயராசா(மொறிஸ்) - பள்ளக்கோட்டை - மன்னார்)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**வேந்தன்** (அடைக்கலம் முத்துக்குமார்- உடையார்கட்டு - முல்லைத்தீவு)

வில்பத்துக்காடு - மருதமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சசி** (இராசமணி குபேந்திரன் - மாந்தை- மன்னார்)

கட்டுவன் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**சரிதா** (சோதிலட்சுமி இராசையா - அளம்பில்- மணலாறு)

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

**சீக்கோ** (சிவலிங்கம் தெய்வேந்திரன்-கிரான்-மட்டு)

கரம்பனில் சிறிலங்கா இராணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்ட அவரது கத்தியாலேயே வெட்டிக் கொல்லப்பட்ட சீவல் தொழிலாளியான தமிழர்.

அம்பாறையில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு திருமலை - தோப்பூர், பட்டியடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் மணி** (பொன்னையா சங்கரலிங்கம்- சம்பூர், மூதூர் - திருமலை)

திருமலை - ராவடிச் சேனையில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாமில் கடும் சித்திரவதையின் பின் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/8171)

### சிந்தனைக்கு

துரதிர்ஷ்டம் தங்களை வெல்வதற்கு இடம் கொடுத்துவிட்டு மரணத்தில் புகலிடம் தேடும் கீழ்த்தர கயவர்கள் சிலர் உள்ளனர்.

- அகேத்தான்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05

## தேசவிரோதிகளிடம் விழிப்பாக இருப்போம்!

தமிழ் மக்களின் பிரச்சினைகள் எதையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக இல்லை. இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை எனச் சாதிப்பதிலேயே சிறிலங்கா அரசாங்கம் அக்கறையாகவுள்ளது. அதிலும், குறிப்பாக சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்கா இவ்விடயத்தில் தீவிரமாகவே உள்ளார்.

டிங்கிரி பண்டாவின் பார்வையில் தமிழர் தேசிய இனப்போராட்டம் என்பதும், அவர்களின் உரிமைக்கான கோரிக்கைகளும் பயங்கரவாதப் பிரச்சினை என்ற நிலையிலேயே இருக்கின்றது. இந்நிலையில், எத்தகைய அரச பயங்கரவாதச் செயல் மூலமாவது தமிழர் தேசிய இனப் போராட்டத்தை ஒடுக்கவும், தமிழ்மக்களை அழிக்கவுமே டிங்கிரி பண்டா தலைமையிலான சிங்கள அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதன் ஒருபகுதியாக, இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்கள் தாயகப் பகுதியை ஆக்கிரமிக்க முற்படுவதோடு, பெரும் எடுப்பில் இனப்படுகொலையையும் நடத்தி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அண்மைக் காலத்தில் பொதுமக்கள் பெருமளவில் கூடும் பொது இடங்கள் சிறிலங்கா விமானப் படையின் இலக்காக மாறியுள்ளதெனலாம்.

இதேவேளை, இவ் இனப்படுகொலை மற்றும் நாசகார வேலைகளுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சில இலக்குகள் மீது நாசகார தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் தமது கைக்கூலிகளைப்பயன்படுத்தி வருகின்றது, அதிலும், தொடர்ச்சியாகப் பல இராணு

# மத்தியமாகாண சபையில் எதிரணியை இ. தொ. கா. ஆதரிப்பது ஏன்?

## -தொண்டமான் அறிக்கைமூலம் விளக்கம்

ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தின்போது தேயிலைத் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைச் சுட்டிக்காட்டி தனியார் மயமாக்கப்படுவது குறித்து எமது தயக்கத்தை வெளிப்படுத்தியபோதும், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்ட யாக்கம் என்பவற்றின் கீழான தோட்டங்கள் கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதை ஆதரித்த ஒரே தொழிற்சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே. எனினும் அன்று நாம் தெரிவித்த அச்சங்களும் காட்டிய தயக்கமும் முற்றிலும் நியாயமானவையே என்பது இப்போதைய நடப்புக்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறுஅண்மையில்அமைச்சர் தொண்டமான்கொழும்பில் வெளியிட்டஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்-மத்திய மாகாண சபையில் இ. தொ. கா. எதிர்க்கட்சிகளை ஆதரிக்க முற்பட்டது ஏன் என்பதை விளக்கி அவர் வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் மேலும்குறிப்பிடுகையில்,

பிரபல அரசியல்வாதிகள் சிலரும், கொழும்புப் பத்திரிகைகள் சிலவும் தீவிர இனவாதிகளாக மாறி சிறிலங்காவின் மக்களைத் தவறான பாதையில் வழிநடத்துகின்றனர். மலையகத்தில் உள்ள இந்திய வம்சாவளியினரான இ. தொ. கா உறுப்பினர்களின் வாக்குகளை ஏலம்விட முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இனவாதத்தின் மூலமும், பிரிவினையைத் தூண்டியும் இ. தொ. கா.வின் தோற்றப்பாட்டிற்கு மாசு கற்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக இ. தொ கா தனது நிலைப்பாட்டை மக்களுக்குத் தாமதமின்றி உடன் முன்வைக்க விரும்புகின்றது. இனவாதத்தைத் தூண்டும் முயற்சிகள் அழிவை மட்டுமே ஏற்படுத்தும் என்பதுடன், அரசியல் சமூகப் பதற்றத்தையும் தோற்றுவிக்கக் கூடியது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றது.

துரைமார்களின் ராஜ்யத்தில் தோட்டத்தொழிலாளர்கள் அனுபவித்த துயரங்களும் மனிதாபிமானமற்ற முறையில் அவர்கள் நடத்தப்பட்ட விதமுமே இ. தொ. கா.வின் தோற்றத்திற்கான சரித்திர பூர்வ காரணமாகும். 1939 இல் இது ஆரம்பிக்கப்பட்டது முதலே தொழிற்சங்கமாகவும், அரசியல் கட்சியாகவும் செயற்பட வேண்டியிருந்தது. இந்த இருவேறு செயற்பாடுகளுக்கிடையேயும் 1948 இன் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்ட மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதிலேயே அது பிரதானமாகக் கவனம்செலுத்த வேண்டியிருந்தது.

தலைமையின் நேரடி நடவடிக்கைகளின் பயனாகவும், உறுப்பினர்களின் எண்ணற்ற தியாகங்களின் பயனாகவும், இ.தொ.கா. தனது உறுப்பினர்களின் வேலைக்கு பாதுகாப்பை பெற்றதோடு; கிராமப்புறத்தை சேர்ந்த தொழிலாளர்கள் வாழ்விட வசதியற்ற தொழிலாளர்களாக மட்டுமன்றி வாழுமிட வசதி பெற்ற தொழிலாளர்களாகவும் தோட்டத்துறையில் வேலை வாய்ப்பை பெறும் சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

இ தொ.காவின் அரசியல் செயற்பாடுகளின் மூலம் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளி மக்களின் நாடற்றவர் என்ற நிலை நீக்கப்பட்டதோடு நாட்டு நிர்வாகத்தின் முக்கிய இடங்களில் இம் மக்களின் பிரதிநிதிகள் இடம்பெறவும் வழிவகுக்கப்பட்டது.

இன்று இ.தொ.கா எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களையும் அங்கத்தவர்களாக கொண்டுள்ளது என்பதுடன் தோட்டத்துறையில் மட்டுமன்றி நகரப்புற தொழிலாளர்களையும், புடைவைத் தொழிற்சாலை ஊழியர்களையும், இன்னும் பல வெவ்வேறு தொழிற்துறை தொழிலாளர்களையும் உள்ளடக்கியதாக உள்ளது என்பதும், இ.தொ காவில் 60,000 சிங்களத் தொழிலாளர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர் என்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

இ.தொ.கா ஒரு இனவாத அமைப்போ அல்லது இனரீதியான சிந்தனை கொண்ட அமைப்போ அல்ல. எனினும் இ.தொ.கா இன்று இனவாத ரீதியான குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

தோட்டங்களை நிர்வகிக்கும்தனியார்கம்பெனிகள்அதற்கான உரிமை முப்பதாண்டுகளுக்கும் மேலான காலத்திற்கு நீடித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரியதை அரசு ஏற்றுக் கொள்வது தொடர்பாக எழுந்த பிணக்கே இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படையாக உள்ளது. குறுகிய தொரு காலப்பகுதிக்குள் கடந்த காலத்தில் இக் கம்பெனிகள் நடந்துகொண்ட முறைபற்றி ஆராயாமல் தொழிலாளர்கள் சார்பாக இ. தொ. கா தெரிவித்த யோசனைகளை கருத்திற்கு எடுக்காமல் கடந்த காலத் தவறுகள் மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கும் வகையில் கம்பெனிகளுக்கு நிர்வாக உரிமை வழங்கப்படக் கூடாது என்பதே இ.தொ.காவின் நிலைப்பாடு ஆகும்.

அத்துடன் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் கம்பெனிகளுக்கு ஐந்தாண்டு காலம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மக்கள் மயமாக்கப்பட்ட போது 10 % பங்குகள் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி தோட்டத்துறைத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் 300 நாள் வேலை வழங்கப்பட வேண்டும் என்பதையும் இ. தொ. கா. வலியுறுத்தி வருகிறது.

சாவனிச வாதப் போக்குகளோ, மத அல்லது இன அடிப்படையில் விவகாரங்களைத் திசைதிருப்புவதோ தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க உதவப் போவதில்லை. இத்தகைய போக்குகள் கடந்த காலத்தில் கைக்கொள்ளப்பட்டமையே வடக்கு கிழக்குப் பகுதியின் இன்றைய நிலைக்குக் காரணமாகும். இந்த முரண்பாட்டினால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமது உயிரை இழந்து வரும் அதேவேளையில் இனவாதிகளும், அவர்களது தத்துவ போதகர்களும் வசதியான பாதுகாப்பான வாழ்வை கொழும்பில் அனுபவித்து வருகின்றனர். இன்னும் சிலர் வடக்கு கிழக்குப் பகுதியில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறுவதற்கும் முற்பட்டுள்ளனர்.

இலங்கையின் எல்லா அரசியல் கட்சிகளும் இன்றைய பிரச்சினைகளின் சிக்கலான தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பேசும் போக்கிலிருந்து விடுபட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான வழியைக் காட்ட வேண்டும். வழி காட்ட வேண்டிய உணர்விலிருந்தும் அதன் நோக்கத்திலிருந்தும் விடுபட்ட பின்னர் அரசியல் கட்சியானது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு லாயக்கற்றதாகிவிடும். எனவே ஆழமாக சிந்தித்த பின்னர் நாம் செயற்பட்டு மக்களுக்கு வழிகாட்டவேண்டும். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் நான் பேசுவதற்கும் வழிகாட்டுவதற்கும் பொறுப்புடையவன் ஆவேன்.

இந்தப் பிரச்சினைகளை நான் கிளப்புவதற்காக அமைச்சரவையிலிருந்து தூக்கியெறியப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார். ஒரு தசாப்தத்திற்கும் மேலாக என்னுடன் அமைச்சரவையில் சகாவாக இடம்பெற்றிருந்த போது அவர் இவற்றை மறந்து விட்டிருந்தாரா என்பதை அவருக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசியல் ரீதியான எண்ணப்பாடுகளும், யோசனைகளும் ஏற்கப்படாததன் விளைவுகளாலேயே இன்று வடக்குகிழக்கு பகுதிகளின் சிக்கலான நிலைமைகள் தோன்றுவதற்குகாரணம் என்பதை எச்சரிக்கையோடுசுட்டிக்காட்டுகிறேன்.

தினசரி நடக்கும் சம்பவங்களுக்கு ஏற்ப எதிரொலிகள் எழுப்புவதை விடுத்து புதிய சிந்தனைகளின் அடிப்படையில் புதிய வழிநடத்தல்களையும், நோக்கங்களிற்கேற்ற செயற்பாடுகளையுமே நாடு இன்று வேண்டிநிற்கின்றது.

இந்த வகையிலே இ.தொ.கா. பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கான முதல் முயற்சியாக எல்லா அரசியல் கட்சிகள் மத்தியிலும் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப்பாடுபட்டு வருகின்றது. பேரினவாதச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு யதார்த்தத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான தீர்வுகளை காண்பதற்கு இனியும் தாமதித்தல் ஆகாது. இந்த வகையிலேயே இ.தொ கா.மத்தியமாகாணத்தில்எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## மொஸ்கோவில் மூன்று தமிழர்கள் பொலிசாரின் சூட்டுக்கு பலி

## இ.தொ.கா உறுப்பினர்கள் பதவிகள் பறிக்கப்படலாம்

### சட்டவல்லுநர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் இன்று கொண்டுவரப்பட இருக்கும் நம்பிக்கை இல்

கூடிய ஒழுங்கு நடவடிக்கை ஒன்றின் அடிப்படையில் அவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு அவர்களது இடம்

கோரிக்கைகளும் பயங்கரவாதப் பிரச்சினை என்ற நிலையிலேயே இருக்கின்றது. இந்நிலையில், எத்தகைய அரச பயங்கரவாதச் செயல் மூலமாவது தமிழர் தேசிய இனப் போராட்டத்தை ஒடுக்கவும், தமிழ்மக்களை அழிக்கவுமே டிங்கிரி பண்டா தலைமையிலான சிங்கள அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதன் ஒருபகுதியாக, இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்கள் தாயகப் பகுதியை ஆக்கிரமிக்க முற்படுவதோடு, பெரும் எடுப்பில் இனப்படுகொலையையும் நடத்தி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அண்மைக் காலத்தில் பொதுமக்கள் பெருமளவில் கூடும் பொது இடங்கள்சிறிலங்கா விமானப் படையின் இலக்காக மாறியுள்ளதெனலாம்.

இதேவேளை, இவ் இனப்படுகொலை மற்றும் நாசகார வேலைகளுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சில இலக்குகள் மீது நாசகார தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் தமது கைக்கூலிகளைப்பயன்படுத்தி வருகின்றது, அதிலும், தொடர்ச்சியாகப் பல இராணுவத் தோல்விகளைச் சந்தித்துள்ளமையால், நாசகார வேலைகளில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இம்முயற்சி நீண்டதொரு தொடர் முயற்சியாகும். இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதில் இருந்தே இவ்வாறான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறான சதி நடவடிக்கைகள் பல ஏற்கனவே விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, ஓரிரு நாசகார சதி நடவடிக்கைகள் இடம்பெற்றும் இருந்தன. 1992-ம் ஆண்டு கொம்படியில் நாசகார சக்திகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர்.

இதில் துரதிர்ஷ்டவசமானது என்னவென்றால், தமிழர்களையே சிங்களப் பேரினவாத அரசு தனது கைக் கூலிகளாக, நாசகார நடவடிக்கைகளுக்கு தகவல் வழங்குபவர்களாக, சில சமயங்களில் தமது நாசகாரத் திட்டங்களைச் செயற்படுத்துபவர்களாகப் பயன்படுத்துவதுதான். அதாவது, அற்ப சலுகைகளைக் காட்டி பெரும் இன அழிவு நடவடிக்கையையே எதிரி செய்து முடிக்க எண்ணுகிறான். இது தமிழ் மக்களைப் பொறுத்து பெரும் ஆபத்தான தொன்றாக இருக்கும்அதேவேளை, சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்து மிகவும் நன்மை பயக்கத் தக்கதாகவும், இலகுவானதாகவுமே உள்ளது.

இந்நிலையில், நாசகார சக்திகளின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும். அற்ப சலுகைகளுக்காக தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் கைக்கூலிகள் எமது இனத்தவராகையால் அடையாளம் காண்பதென்பதுமிகவும்கடினமானதாகவே இருக்கும். இவர்களை சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுதல், பிரதேசத்திற்குப் புதியவராக இருத்தல் என்பனவற்றை மட்டும் கொண்டே அடையாளம் காணமுடியும்.

தமிழீழப் போராட்டம் தமிழ் மக்களின் பெரும் அர்ப்பணிப்புக்களின் மத்தியிலேயே இன்றைய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதைச் சில புல்லுருவிகளின் நடவடிக்கைகள் பாதிப்படையச் செய்யாமல் விழிப்புடன் இருந்து பாதுகாக்க வேண்டியது தமிழ்மக்களின் முக்கிய பொறுப்பும் கடமையும் ஆகும்.

---

வின் மக்களைத் தவறான பாதையில் வழிநடத்துகின்றனர். மலையகத்தில் உள்ள இந்திய வம்சாவளியினரான இ.தொ.கா உறுப்பினர்களின் வாக்குகளை ஏலம்விட முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இனவாதத்தின் மூலமும், பிரிவினையைத் தூண்டியும் இ.தொ.கா.வின் தோற்றப்பாட்டிற்கு மாசு கற்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக இ.தொ.கா. தனது நிலைப்பாட்டை மக்களுக்குத் தாமதமின்றி உடன் முன்வைக்க

யற்ற தொழிலாளர்களாக மட்டுமன்றி வாழுமிட வசதி பெற்ற தொழிலாளர்களாகவும் தோட்டத்துறையில் வேலை வாய்ப்பை பெறும் சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

இ.தொ.காவின் அரசியல் செயற்பாடுகளின் மூலம் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளி மக்களின் நாடற்றவர் என்ற நிலை நீக்கப்பட்டதோடு நாட்டு நிர்வாகத்தின் முக்கிய இடங்களில் இம் மக்க

உள்ளது. குறுகிய தொரு காலப்பகுதிக்குள் கடந்த காலத்தில் இக் கம்பெனிகள் நடந்துகொண்ட முறைபற்றி ஆராயாமல் தொழிலாளர்கள் சார்பாக இ.தொ.கா தெரிவித்த யோசனைகளை கருத்திற்கு எடுக்காமல் கடந்த காலத் தவறுகள் மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கும் வகையில் கம்பெனிகளுக்கு நிர்வாக உரிமை வழங்கப்படக் கூடாது என்பதே இ.தொ.காவின் நிலைப்பாடு ஆகும்.

பகுதியில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறுவதற்கும் முற்பட்டுள்ளனர்

இலங்கையின் எல்லா அரசியல் கட்சிகளும் இன்றைய பிரச்சினைகளின் சிக்கலான தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பேசும் போக்கிலிருந்து விடுபட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான வழியைக் காட்ட வேண்டும். வழி

மத்தியிலும் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப்பாடுபட்டு வருகின்றது. பேரினவாதச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு யதார்த்தத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான தீர்வுகளை காண்பதற்கு இனியும் தாமதித்தல் ஆகாது இந்த வகையிலேயே இ.தொ.கா. மத்தியமாகாணத்தில்எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

---

# மொஸ்கோவில் மூன்று தமிழர்கள் பொலிசாரின் சூட்டுக்கு பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவிலிருந்து சட்டவிரோதமாக ஜேர்மனிக்குள் புகமுற்பட்ட மூன்று தமிழ் இளைஞர்கள் மொஸ்கோ பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறும் நோக்குடன் சென்ற வட பகுதியைச் சேர்ந்த ஆறு தமிழ் இளைஞர்கள் மொஸ்கோவிலிருந்து ருமேனியா கங்கேரி ஊடாக ஜேர்மனுக்குள் புகமுற்பட்ட போது ருமேனிய மொஸ்கோ எல்லையில் வைத்து பொலிசார் இவர்களைத் தடுத்தனர் எனவும் இதன் போது இவர்கள் நிற்காது தப்பியோட முற்பட்ட போது பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர் எனவும் இதன் போது மூன்று இளைஞர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்துப் பலியானதாகவும் மற்றைய மூவரும்பொலிசாரால்திருப்பிரஷ்யாவிற்குள் அனுப்பப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு பலியானவர்களில்ஒருவர்முல்லைத்தீவைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனவும் மற்றைய இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. மேற்படி சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்றுள்ளதாக அறிய வருகிறது.

இதேவேளை சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுமொஸ்கோ பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அங்கு நடந்த சித்திரவதையின் போது பலியானதாகவும் இச்சம்பவம் கடந்த மார்ச்சில் நடைபெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

---

# இ.தொ.கா உறுப்பினர்கள் பதவிகள் பறிக்கப்படலாம்

## சட்டவல்லுநர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையில் இன்று கொண்டுவரப்பட இருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் போது இ.தொ.கா எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாகநடந்துகொள்ளுமேயானால் அதன் உறுப்பினர்கள் மாகாணசபையின் அங்கத்தவர்கள் பதவியை இழக்கும் ஆபத்து இருப்பதாக சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தல்களின் போது இ.தொ.கா உறுப்பினர்களும், ஐ.தே.க வின் யானை சின்னத்திலேயே போட்டியிட்டனர் என்பதால், ஐ.தே.க எடுக்கக் கூடிய ஒழுங்கு நடவடிக்கை ஒன்றின் அடிப்படையில் அவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு அவர்களது இடம் அடுத்தவர்களால் நிரப்பப்படலாம் என்பதும் சட்டத்தின் மூலம் சாத்தியமானதே என்று தேர்தல் ஆணையாளருக்கு நெருக்கமான வட்டாரங்கள் சிலவும் சுட்டிக் காட்டியுள்ளன.

எனினும் இ.தொ.கா உறுப்பினர்கள் வாக்களிப்பிலிருந்து விலகி இருந்தால் கூட மத்திய மாகாணசபையில் எதிர்க்கட்சிகளின் பலம் அதிகமாகிவிடும் என்பது தெரிந்ததே.

---

# தலைவரை தடுத்துவைப்பது அரசியல்சித்திரவதையாகும்

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் அயோத்தியா விவகாரம் தொடர்பாக காவலில் வைக்கப்பட்டுள்ளமையானது ஓர் அரசியல் சித்திரவதையாகும் என்று அக் கட்சியின் தேசிய செயற்குழு விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்தக் கமிட்டியின் இரண்டு நாள் கூட்டம் புதுடில்லியில் நடைபெற்றதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

காவலில் வைக்கப்பட்டுள்ள தலைவர்களை விடுவிக்கக் கோரியும், அயோத்தி விவகாரம் தொடர்பான வழக்குகளை மீளப் பெறக் கோரியும் கிளர்ச்சிப் போராட்டம் மேலும் தீவிரமாக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

# கடாபி கண்டனம்

(டியூனிஸ்)

முஸ்லிம்களுக்கு ஆத்திரம் ஏற்படுத்திய 'சாத்தானின் வசனங்கள்' என்ற நூலை எழுதியவரான சல்மான் ருஷ்டியை பில் கிளின்ரன் சந்தித்ததை லிபிய ஜனாதிபதி கடாபி கண்டித்துள்ளார்.

# ஏகமனதாகத் தெரிவு

(டில்லி)

டார்ஜிலிங் கூர்க்காமலைப் பகுதி வளர்ச்சி சபைக்கான தேர்தலில் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி எனப்படும் ஜி.என்.எல்.எப்பின் தலைவர் சுபாஸ்கெய்சிங்உட்பட இக் கட்சியின் ஏழுவேட்பாளர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவுகளை மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், மாவட்ட மாஜிஸ்திரேட்டும் கூட்டாக அறிவித்துள்ளனர். இருபத்தெட்டு இடங்களைக் கொண்ட மாநில வளர்ச்சி சபைக்கான மிகுதி 21 இடங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 31-ம் திகதியன்று நடைபெறவுள்ளது.

---

# சாவ் விளையாட்டு விழா டாக்காவில் ஆரம்பம்

(டாக்கா)

தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கிடையிலான சாவ் விளையாட்டுவிழா நேற்று டாக்காவில் ஆரம்பமாகியது. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் பதினொரு வகையான விளையாட்டுக்களில் பங்கேற்கவுள்ளனர். எட்டுநாட்கள் நீடிக்கும் இவ் விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் அடுத்த சாவ் விளையாட்டு விழா சென்னையில் அடுத்த ஆண்டில் நடத்தப்படுமென டாக்காவில் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# செய்யத்சகாபுதீன் இராஜினாமா

(டில்லி)

பாப்ரி மஜ்ஜித் உறுப்பினர் கமிட்டியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரான செய்யத் சகாபுதீன் இராஜினாமா செய்துள்ளார். புதுடில்லியில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தமது இராஜினாமா தொடர்பாக அக் கமிட்டியின் தலைவருக்கு ஏற்கனவே கடிதம் மூலம் அறிவித்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

---

# ஐரோப்பிய சமூகத்துடன் இந்தியா ஒப்பந்தம்

(டில்லி)

இந்தியாவும் ஐரோப்பிய சமூகமும் பரஸ்பர நலன்களுக்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்து இட்டுள்ளன. ஐரோப்பிய சமூகம் தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடொன்றுடன் இத்தகைய ஒப்பந்தமொன்றில்கைச்சாத்திடுவது இதுவே முதல் தடவையாகும். இந்த ஒப்பந்தத்தின் மூலமாக ஐரோப்பிய சமூகநாடுகளிடம் இருந்து தொழில்நுட்ப உதவிகளை இந்தியா பெற இருப்பதுடன், எரிபொருள், தகவல்தொடர்பு, விவசாயம், உல்லாசப் பயணம் போன்ற பல்வேறு துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்புக்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது. பிரஸ்சல்சில் நேற்று கையெழுத்தான இவ் ஒப்பந்தத்தில் இந்தியாவின் சார்பாக திட்டக் கமிஷன் துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜி கையெழுத்திட்டுள்ளார்.

# அணுவாயுதங்களை வழங்க உக்ரையின் இணக்கம்

(மொஸ்கோ)

தன்னிடம் இருக்கும் அணுவாயுதங்களை ரஷ்யாவிடம் கையளிப்பதற்கு உக்ரையின் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. உக்ரையின், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. உக்ரையின் அரசுக்கு நட்டஈடு வழங்கப்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

புலிகளின் முகாம்என நினைத்து

# யாகப்பர் ஆலயம் மீது குண்டு வீசி அழித்த விமான ஓட்டி ஒரு குருடனே

## கொழும்பு பேராயர் தெரிவிப்பு

சரித்திரப் பிரசித்தி பெற்ற புனித யாகப்பர் ஆலயத்தின் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதன் மூலம் ஆலயங்களில் கூட மக்கள் பாதுகாப்புக்காக தஞ்சமடைய முடியாதுள்ளதை நாம் உணருகின்றோம். இத் தாக்குதலினால் இறந்தும், காயமடைந்துமுள்ள குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கவும் இது ஒரு மனிதாபிமானமற்ற போராக தொடர்ந்து சிறிலங்காவில் நடைபெற்றுவருகின்றது யாழ் புனித யாகப்பர் ஆலயத்தின் அழகையும் மிகப் பிரமாண்டமான உயரத்தையும் அதன் மூன்று கோபுரங்களையும் நாம் அறிவோம். இப் பிரமாண்டமான தேவாலயத்தை புலிகளின் பாசறை என நினைத்து குண்டுவீசி அழித்த விமானமோட்டி ஒரு குருட்டு விமானியாகத்தான் இருக்க முடியும் என கொழும்புப் பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்கள் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது சிறிலங்கா விமானமோட்டி குண்டுத் தாக்குதல் நடாத்தியது தொடர்பாக யாழ், ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அனுப்பிய கடிதத்திற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக்கடிதம் கொழும்புப் பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ ஆண்டகையினால் கொழும்புப் பேராயர் இல்லத்தில் இருந்து கடந்த 30ஆம் திகதி எழுதி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது நடந்து வரும் இப் போரினால் முழு இலங்கையும் இரத்தக்களரி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான விபரங்கள் கொழும்புப் பேராயரின் செயலாளர் ஆயர் கோமஸ் ஆண்டகையினால் சிறிலங்காவின் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் யாழ். ஆயருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரியப்படுத்தி உள்ளார். (17)

## டிசம்பர் மாத நிவாரணம் மீனவருக்கு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு டிசம்பர் மாதத்திற்கு நிவாரணம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி தெரிவித்துள்ளது.

இந் நிவாரணம் தொடர்ந்து மாதாந்தம் வழங்குவதற்கான அனுமதி இன்னமும் தங்களுக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்படி கடல் வலயச் சட்டத்தினால் யாழ் மாவட்டத்தில் சுமார் பத்தாயிரம் மீனவக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## உதைபந்தாட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர் மாண நிதிக்காக பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நாடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை 3-00 மணிக்கு யங் கென்றீஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சென் நீக்கலஸ் விளையாட்டு கழகமும் மாலை 4-00 மணிக்கு ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. இப் போட்டிகள் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் வடக்கு, தெற்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் பாடசாலை ஆய்வுகூட உதவியாளருக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் 8 30 தொடக்கம் 4 30வரை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர, தற்காலிக ஆய்வுகூட உதவியாளர்கள் அனைவரையும் தவறாது இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் கள்கேட்டுக்கொள்கின்றனர்.

## டாக்டர் எம்.ஜி.ஆரின் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

டாக்டர் எம் ஜி ஆர் அவர்களின் ஆறாவதுஆண்டுநினைவஞ்சலி கூட்டமும் சிலைகளுக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

எம்.ஜி ஆர் முன்னேற்றக் கழகத்தலைவர் பொன். மதிமுகராஜா தலைமையில் நடைபெற இருக்கும் இந் நிகழ்ச்சிகளில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கவைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் நிகழ்த்துகின்றார் நினைவுப் பேருரைகள், நினைவஞ்சலிக் கூட்டங்கள் மலரஞ்லி நிகழ்ச்சிகளுக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குருநகரிலுள்ள எம். ஜி .ஆர் சிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மலர் மாலை சூட்டி நினைவுரை நிகழ்த்துவர். பட்டிமன்றம், கவியரங்கு, மெல்லிசை, வில்லிசை, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## அகதிமுகாமிலிருந்தவர்கள் மழையினால் இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் அகதி முகாம்களில் இருந்த பெருமளவு தமிழ் மக்கள் அங்கிருந்தும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. மட்டக்களப்பு நகரை அண்டிய சரீரா இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து 200 குடும்பங்கள் கல்வியங்காடு உணவுக் களஞ்சியத்திற்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

பேய்தாழை, மண்டூர் அகதி முகாம்களிலிருந்தும் பெருமளவு மக்கள் வெளியேறியுள்ளனர். கிராமங்கள் பலவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. நகரை அண்டிய புதூர், கூளாவடி, கல்லடி, மாமாங்கம், இருதயபுரம், கருவேப்பங்கேணி, தாண்டவன்கேணி ஆகிய கிராமங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் ஏறாவூரில் 208 குடும்பங்களும், சித்தாண்டி ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதிகளில் இருந்து 4504 குடும்பங்களும், வாகரையில் 250 குடும்பங்களும் வெளியேறியுள்ளன.

வாழைச்சேனையின் 90 வீதமான பகுதி நீரில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பு - வாழைச்சேனைவீதி துண்டிக்கப்பட்டுள்ளது.

## தொடர்புகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தில் உரிமை கோரப்படாமல் ஒரு துவிச்சக்கர வண்டி உள்ளதாக நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி துவிச்சக்கரவண்டி உரிமையாளர் தகுந்த ஆவணங்களுடன் மேற்படி சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்.

## கோடரி வெட்டு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த வாலிபர் ஒருவர் வீட்டு உரிமையாளரான பி, இரத்தினசபாதி என்பவரை கோடரியால் வெட்டி படுகாயப்படுத்தியதாக சொல்லப்படுகிறது.

மேற்படி சம்பவம் நேற்றிரவு 8.50 மணியளவில் நடந்துள்ளது. படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வாதுவ புறப்பட்டது

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'வாதுவ' கப்பல் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. இக்கப்பலில் பயணிகள் எவரும் ஏற்றிச் செல்லப்படவில்லை. மேலும் மழை காரணமாக தபால் பொதிகளையும் ஏற்றிச் செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டது. (யோ)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

20 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11726

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-9855, 42-1712, 41-6933, 41-1799, 26-6628 24-9549, 41-1227, 27-6762, 27-3910, 24-2655 26-7540, 26-8810, 27-2087, 26-0786, 27-9033 27-5049, 26-3183, 24-5177, 27-7263.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-3594, 26-0573.



### அச்சகம் தேவை

சகல வசதிகளும் கொண்ட அச்சகம் தேவை. பின்வரும் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்,

விளம்பர இல. 302

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம்


## நாகபட்டினப்பகுதியை இன்று புயல் கடக்கும்

(சென்னை)

வங்கக்கடலில் உருவான புயல் காற்று இன்று அதிகாலையில் நாகபட்டினத்திற்கும் பாண்டிச்சேரிக்கும் இடையில் கரையை கடக்கலாம் என நேற்று மாலை சென்னை வானிலை நிலையம் அறிவித்தது. நேற்றுக்காலை நாகபட்டினத்திற்கு கிழக்கே 50 கிலோமீற்றர் தூரத்தில்நிலைகொண்டிருந்த இந்த புயல் வடக்கு,வடகிழக்கு திசையில் நகர்ந்து செல்வதாக அது மேலும் குறிப்பிட்டது.

இதன் காரணமாக இன்று தமிழ்நாடு முழுவதிலும்மழை பெய்யும் எனவும் கடலோரத்தில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசும் எனவும் சென்னைவானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது.

## இந்துசமய மாணவருக்கு வதிவிட பயிற்சி முகாம்

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கற்கும் இந்து சமய மாணவ மாணவிகளில் தெரிவு செய்யப்பட்ட நூற்றிஇருபது மாணவர்களுக்கு இந்துசமய பாடத்தில் வதிவிடப் பயிற்சி முகாம் நாளை தொடக்கம் 26ஆம் திகதி வரையுள்ள ஐந்து நாட்கள் நடாத்த யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் தெற்கு வலய சல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

...த்திலும் நடைபெற உள்ளது,

ஆறு கோட்டங்களைச் சேர்ந்த மாணவிகளுக்கும் இக்கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (17)

## வெள்ளப் பாதிப்பு குறித்து செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ். குடாநாட்டில் பெய்துவருகின்ற கடும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய அனர்த்தம் சம்பந்தமான யாழ். அரச அதிபர் மற்றும் உதவி அரச அதிபர்கள் மட்டத்திலான கூட்டம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தற்சமயம் யாழ். குடாநாட்டில் மழை வெள்ளம் ஏற்படுத்திய அழிவு, மக்களின் இடம்பெயர்வுகள், அவற்றிற்கு எடுக்கப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள் சம்பந்தமாக இக் கூட்டம் அமைந்திருக்கும் என யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (பா)

## பாராட்டு

அண்மையில் வெளியான 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் 16 மாணவர்கள் சித்தியடைந்து வடமராட்சிப் பகுதியில் முன்னணியில் திகழும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இம்மாணவர்

## நத்தார்

22ஆம் திகதியாகும். கப்பல் வசதியீனம் காரணமாக அடுத்துவரும் கப்பல் ஜனவரியில் புறப்படும் போது தான் வடபகுதிக்கான தபால்கள் எடுத்துவரப்படுமென்று

## பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ்

இ. தொ. கா.

41-9855, 42-1712, 41-6933, 41-1799, 26-6628
24-9549, 41-1227, 27-6762, 27-3910, 24-2655
26-7540, 26-8810, 27-2087, 26-0786, 27-9033
27-5049, 26-3183, 24-5177, 27-7263.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-3594, 26-0573.

## அச்சகம் தேவை

சகல வசதிகளும் கொண்ட அச்சகம் தேவை. பின்வரும் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்,

விளம்பர இல. 302

**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்**

(6958)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்:
1966-10-11

மண்ணுக்காய்:
11-11-1993

### லெப்டினன்ட் ஆராதனா
(றிஜிதா காராளசிங்கம்)

மண் விடுதலைத் தாகம் கொண்டு
பெண் புலியென நீ நடந்தாய்—விழுப்
புண் பல நீ சுமந்தாய் வீரப்
பெண் புலியென நீ சரிந்தாய்.

மணலாற்றை நீ கடந்தாய் அதில்
தனியாற்றல் நீ பெற்றாய்
கட்டைக்காடு வெற்றிலைக்கேணி
வெட்டைவெளிப் போர் புரிந்தாய்.

ஆனையிறவுப் போர்முதல் பூநகரிவரை
பாயும் புலியாகி வீரச் சமர்புரிந்தாய்
ஆறுமோ எம்மிதயம்? என்னாளும்
மாறுமோ உன் நினைவு?

என்றும் உன் நினைவு மாறாத

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(6943)

பெற்றோர், சகோதரர்,
சிறியதந்தையர், மாமா,
மைத்துனர், உறவினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

(பா)

# இந்துசமய மாணவருக்கு வதிவிட பயிற்சி முகாம்

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கற்கும் இந்து சமய மாணவ மாணவிகளில் தெரிவு செய்யப்பட்ட நூற்றிஇருபது மாணவர்களுக்கு இந்துசமய பாடத்தில் வதிவிடப் பயிற்சி முகாம் நாளை தொடக்கம் 26ஆம் திகதி வரையுள்ள ஐந்து நாட்கள் நடாத்த யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

வேலணை, யாழ். சாவகச்சேரி கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும், பருத்தித்துறை, மருதனார்மடம், பண்டத்தரிப்பு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த இந்துசமய மாணவர்களுக்கு யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெற உள்ளது,

ஆறு கோட்டங்களைச் சேர்ந்த மாணவிகளுக்கும் இக்கருத்தரங்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(17)

## ஆட்சி

தூறு அல்லது அதிருப்தியை வார்த்தை அல்லது எழுத்து மூலம் அல்லது வேறு வழிகளால் மேற்கொள்ள எத்தனிப்போர் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவர்களாவர். அரசியல் யாப்பில் அல்லது நீதி நிர்வாகத்தில் அவமதிப்பு செய்ய முயற்சிப்போர், இலங்கையில் வாழும் பல்வேறு பிரிவினரிடையே வெறுப்பு பகையை வளர்ப்போர் ஆகியோரும் இவ் விதிக்கமைய தண்டனைக்குள்ளாவர்

இலங்கையில் உள்ள எந்த பிரிவினரை அல்லது குழுவினரை வன்முறையில் ஈடுபடும்படி அல்லது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும்படி, சட்டத்திற்கு அடிபணிய மறுக்கும்படி தூண்டுவோரும் தண்டிக்கப்படுவர். சுவரொட்டி, துண்டுபிரசுரங்களில் பொதுமக்கள் வாழ்க்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான தூண்டும் வாசகங்கள் தண்டனைக்குரிய குற்றமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகள் ஏன் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை முன்பு இச்சட்டம் பத்திரிகைகளுக்கு எதிராக கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

லையில் நாகபட்டினத்திற்கும் பாண்டிச்சேரிக்கும் இடையில்

## நத்தார்

22ஆம் திகதியாகும். கப்பல் வசதியீனம் காரணமாக அடுத்துவரும் கப்பல் ஜனவரியில் புறப்படும் போது தான் வடபகுதிக்கான தபால்கள் எடுத்து வரப்படுமென்று யாழ் அரசாங்க அதிபர் தகவல் தெரிவித்திருக்கின்றார்.

உலகம் பூராகவும் உள்ள கிறிஸ்தவ கத்தோலிக்க மக்கள் வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களைப் பரிமாற்றிக் கொள்ளும் பொழுது வடபகுதியைச் சேர்ந்த இம்மக்களுக்கோ அந்தவாய்ப்புக் கிட்டப் போவதில்லை.

சர்வதேச தபால் ஒன்றியத்தினரது வேண்டுகோளின்படி சம்பந்தப்பட்ட நாடுகளில் நவம்பர் மாதத்திற்கு முன்பிருந்தே தபாலில் சேர்க்கப்பட்ட வாழ்த்து மடல்கள் எதிர்வரும் ஜனவரிக்கு பின்பே இங்குள்ள உரிய முகவரியாளர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும். அவையும் அடுத்து வரும் கப்பலில் எடுத்து வரப்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

இறுதியாக எடுத்துவரப்பட இருந்த ஆயிரம் தபால்பொதிகளும் கப்பலில் ஏற்றப்பட இருந்த நேரத்தில் அவற்றில் சந்தேகத்துக்கு இடமான தடைசெய்யப்பட்ட பொருள்கள் இருப்பதாகவும் தபால்கள் சோதனைக்குட்படுத்தப் படல் வேண்டும் எனவும் தடுத்து நிறுத்தியவர்கள்படை அதிகாரிகளே என சம்பந்தப்பட்ட கிறிஸ்தவ கத்தோலிக்க மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(பா)

## கடத்தப்பட்ட

உறுப்பினர்களும் மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு எதிராகவே தாம் வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தது. நேற்றுக்காலை நாகபட்டினத்திற்கு கிழக்கே 50 கிலோமீற்றர் தூரத்தில்நிலை கொண்டிருந்த இந்த புயல் வடக்கு,வடகிழக்கு திசையில் நகர்ந்து செல்வதாக அது மேலும் குறிப்பிட்டது.

இதன் காரணமாக இன்று தமிழ்நாடு முழுவதிலும்மழை பெய்யும் எனவும் கடலோரத்தில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசும் எனவும் சென்னைவானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது.

## பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் கோப்பாய் பகுதியில் 2000 பனம் விதைகளும், கொடிகாமம் பகுதியில் 5600பனம் விதைகளும்நடப்பட்டுள்ளன.

## முல்லை

யில் தொண்டர் ஸ்தாபனங்கள் ஈடுபட்டுவருகின்றன.

புதுக்குடியிருப்பு, மணலாறு பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருவாரத்திற்கு தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. இதேவேளை தொண்டர் ஸ்தாபனங்கள் உடனடியாக சமைக்கப்பட்ட உணவை வழங்கி வருகிறது. ஒட்டிசுட்டான் பகுதியில் வெள்ளப்பெருக்கு அதிகமாக இருப்பதால் அப்பிரதேசத்திலிருந்து மக்களை மீட்கும் பணியில் தொண்டர் ஸ்தாபனங்கள் ஈடுபட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க முத்தையன்கட்டு குளம் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது. அத்துடன் அப்பகுதியில் உள்ள சிறிய குளங்களும் இதேநிலையிலேயே உள்ளன.

## மத்திய

பெறவுள்ள நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் அதனை ஆதரித்து வாக்களிக்காமல் தடைசெய்யும் நோக்கிலேயே இவர்கள் கடத்தப்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள்தெரிவிக்கின்றனர். மத்தியமாகாண சபையில் உள்ள 56 உறுப்பினர்களில் 11 பேர் இ.தொ.கா உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் 11 உறுப்பினர்களும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்துவாக்களிக்கும் பட்சத்தில் ஐ. தே. கட்சி மத்திய மாகாணத்தில் தனது ஆட்சியை இழக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கப்பட்டுள்ளது.

# வெள்ளப் பாதிப்பு குறித்து செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் யாழ். குடாநாட்டில் பெய்துவருகின்ற கடும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய அனர்த்தம் சம்பந்தமான யாழ். அரச அதிபர் மற்றும் உதவி அரச அதிபர்கள் மட்டத்திலான கூட்டம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தற்சமயம் யாழ். குடாநாட்டில் மழைவெள்ளம் ஏற்படுத்திய அழிவு, மக்களின் இடம்பெயர்வுகள், அவற்றிற்கு எடுக்கப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள் சம்பந்தமாக இக் கூட்டம் அமைந்திருக்கும் என யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

(பா)

## இ. தொ. கா.

இல்லை. வேலைநிறுத்தத்திற்கும் இ.தொ.காவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லைஎன இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்தார்.

## வடமராட்சியில்

ந்துள்ளதாக நமது தென்மராட்சி செய்தியாளர் அறிவிக்கின்றார். இம்மக்கள் குடியிருந்த முகாம் குடிசைகள் கடும் காற்றினாலும் அடை மழையினாலும் பெரும் சேதத்திற்குள்ளாகி வருவதுடன் வர்த்தகநிலையங்கள் அனைத்தும் இரண்டு மணியுடன் மூடப்படுவதாகவும் இதனை அடுத்து வீதிகள் அனைத்தும் வெறிச்சோடி மக்கள் நடமாட்டமற்றுக் காணப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு மக்களுக்கான வெள்ள நிவாரணப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகிறது. கெற்பேலி மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு மூன்று நேர உணவினையும் வழங்கி வருகின்றது.

இதேவேளை இக் கழகம் நாவற்குழி லவனிதா முகாமிலிருந்து வெளியேறி நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கும் காலைநேர உணவை வழங்கி வருகின்றது.

வலிகாமம்பகுதியில் நவாலி பகுதி முகாம்கள் அனைத்தும் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இம் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நகர்த்திச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சில முகாம்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் குழந்தைகள், சிறுவர்கள் உட்பட அனைவருமே ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (ச, யோ,86)

விக்கப்பட்டது. (யோ)

## பாராட்டு

அண்மையில் வெளியான 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் 16 மாணவர்கள் சித்தியடைந்து வடமராட்சிப் பகுதியில் முன்னணியில் திகழும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இம்மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டி விழாவொன்றை நடாத்தவுள்ளனர்.

(25)

## வேலை

செல்லமாட்டார்கள். அரசு, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதன்மூலம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தவேலைநிறுத்தத்தைமற்றையஇடங்களுக்கு விஸ்தரிக்கவோ அல்லது தொழிலாளர்களை மேலதிகமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தவோ முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது என்று அமல் ஜெயசிங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தைத் சட்ட விரோதமாக்கவே அரசு அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. அத்துடன் வேலை நிறுத்தத்தைத் தலைமை தாங்கி நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடனும் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அமல் ஜெயசிங்கா மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

மத்திய மாகாண சபையில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப்பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அடுத்து 1994 டிசம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அது அரசுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றார்.

## உறுப்பினர்

தோட்டத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைகள், மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டு காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது.